# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 76/2015

**24.04.2025 அ.சா.14 . மரு. ரமேஷ் குமார், த.பெ. நடராஜன்**

**Accused present.**

**எதிரி தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.14 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

31.08.2013 அன்று மதியம் 2.24 மணிக்கு காயம் அடைந்த சக்திவேல் சிகிச்சைக்கு ஆஜர்படுத்தப்பட்டார். அவர் 30.08.2013 அன்று இரவு 9.00 மணிக்கு தாக்கப்பட்டதாக கூறினார். விபத்து பதிவேட்டு நகலில் 31.08.2013 அன்று இரவு 9.00 க்கு தாக்கப்பட்டதாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான் . அவர் Medium Gravel கல்லால் தாக்கப்ட்டதாக விபத்து பதிவேட்டு நகலில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. Medium Sized Stone என்று குறிப்பிட்டு உள்ளேன் . காயம்பட்ட நபரின் வயிற்றின் அடிப்பகுதியில் அந்த கல்லால் தாக்கப்பட்டதாக எழுதியுள்ளேன் . அவர் சிறுநீர் சிவப்பு நிறத்தில் வருவதாக குறித்து நான் எந்த பரிசோதனையும் செய்யவில்லை. வயிற்றிற்கு நுண் கணினி படம் எடுக்கவில்லை . அன்றைய தினம் மாலை சுமார் 3.00 மணியளவில் மேல்சிகிச்சைக்கு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். இது சம்மந்தமாக நான் உடனடியாக காவல் துறைக்கு தகவல் கொடுத்தேன். மேற்படி நபர் என்னிடம் ஆஜர்படுத்துவதற்கு முன் தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.